உ

சிவமயம்

வேலும் மயிலும் துணை

# குடாரப்பு முருகன்
# கூத்தலங்காரம்



ஆக்கியோன்

கலாபூஷணம் திரு. சிதம்பரப்பிள்ளை பசுபதி

(குடாநீரூரான்)

14.09.2018

உரிமை : குடாரப்பு முருகன் குரை கழலிற்கே

நூலாசிரியர்

உ

சிவமயம்

வெற்றிவேல் துணை

## கலாபூஷணம் திரு. சிதம்பரப்பிள்ளை பசுபதி (குடாநீரூரான்) பாடிய

# குடாரப்பு குமரன் கூத்தலங்காரம்



### காப்பு, வெண்பா

*i.* ஐந்து கரமும் அணையும் பெறுவயிறும்
தந்திமுகமும் தனிக்கோடும் - கொண்டகுடா
குஞ்சரமே, குமரன் கூத்து அழகு நான்பாட
நெஞ்சகத்தில் நின்று நிறை.

### வேண்டுதல் - கலிப்பா

*ii.* குலத்துறு கோயிலை கும்பிட்டு, கூ என்று கூப்பிடவே
தலத்தினில் வந்து தண்ணளி செய்திடு தந்திமுகா,
வலத்தினில் வேல்கொண்டு வாழ் குடாரப்பு வதிந்துறையும்
குலத்தனின் கூத்தை, குழைந்து நான்கூற குணமருளே.

### பாயிரம்

1. குடாரப்பு குமரனது கூத்து அலங்காரமதை
விடாதப்பூர் மேன்மையது வீழ்ந்துபட்ட தன்மையதை
தடாதப்பூர் தலத்துறையும் தங்க வடிவேலனுக்கு
படாதப்பூர் எம் நிலையை பாட்டில்நான் பாடுவனே.

2. மனமது குரங்காய் தாவ, மாட்சிமை நெறியாய் தேற
குணமது ஆசை மீற, குமரனின் அன்பு ஊற
தனமென அருளும் சார, தங்கிடு விருப்பும் சேர
இனமது சிறந்து பாட, இயம்பலங்காரம் பாரீர்.

3. சீரார் குடாரப்பு தெய்வம் அருள்தர வேண்டி
பாரார் புகழ்ந்தேத்த பத்திமையில் பாவாக்கி
காரானைக் கன்றின் கழல் பணிந்து வேண்டிநிற்போன்
ஏரார் குலத்துதித்த சிதம்பரத்தார் சீர்மகனே.

## கூத்து

4. கந்த அலங்காரம் கண்டு மகிழ் சிவபாலா
இந்த அலங்காரம் ஏற்று அருள் செய்வைஎன
உந்தன் திருக்கூத்தில் உள்நின்று நான் பாட
எந்தன் முருகாவே ஏற்றிடுவாய் அரங்கமதில்.

5. ஆடும் திருக்கூத்தை ஆரறிவார் ஆறுமுகம்
பாடும் பணியும் பணித்தருள்வாய், பத்தன் நான்
தேடும் திருக்கூட்டம் சேர்ந்த சிறப்பதனால்
கூடும் திருவருளால் கூறினேன் உன்கூத்து.

6. அந்தமிலா ஆனந்தத்து ஆதியே, அவை ஆடும்
சிந்தன் அருள்கூத்தோனே செம்மால் மருகோனே
பந்தமயல் நீங்க பாவலனாய் பாட்டாலே
உந்தன் கருணையினால் ஓதினேன் இந்த முறை.

## வேறு

7. காரைப்புலவும் காட்டும் கரிந்த பனை வடலி
வேரைப் புரட்டிய வேம்பும் விழுந்திடு ஆலமுடன்
சாரக் குவிந்த சுடுமணல் மேடும் சாய்ந்துவிட்ட
ஊரைத் தனிமையில் உற்றவனே உயர்வேலவனே.

8. அப்பாவும் இல்லை அவர் மகன் இல்லை அவர் வழியில்
தப்பாமல் வந்த தமரும் உறவும் எவரும் இல்லை
ஒப்பாரும் மிக்க உயர்வும் இழந்து உறங்கு நிலை
சப்பாணி கொட்டி இருந்தனையோ தனி வேலவனே.

9. அன்பால் குழைந்து அகத்தால் மெலிந்து ஆதரவாய்
நின்பால் இருத்தி நிறை பணி செய்வித்த நிர்மலனே
உன்பால் இருக்க ஒரு துணை இன்றி உயர்வும் இன்றி
தன்பால் இருக்க நினைந்ததென்ன தனி வேலவனே.

10. அன்னம் அமுது அவி மோதகம் வடை ஆன பல
சொர்னம் படைத்த தூய பல் தலைமுறை கண்டவரே
என்னம் புதுமை எவ்வகை மாந்தரும் இன்றி ஒரு
தன்னம் தனிமை அடைந்தனையோ தவவேலவனே.

11. காட்டில் எளிதில் கிடைத்திட்ட நாக மணியதுபோல்
கூட்டில் குருகாய் கூடி மகிழ்ந்த குடும்பம் எல்லாம்
நாட்டில் செறிந்து நாற்திசை சேர்ந்து நலிய தலை
மாட்டில் அமர்த்த மறந்தனையே மதி வேலவனே.

12. தட்டார் குடியும், தகு சோழன் தங்கு தண் குடியும்
கிட்டாமல்போக கேண்மையும் நாதியும் கெட்டுவிட
மட்டான காடும் மரமும் கரிந்த மணல் பரப்பும்
ஒட்டானதென்று உறுதுணையாகி உவந்தனையே.

**வேறு**

13. பெருத்த முடைவேம்பும் பெருகூல தன்-அடியும்
வருத்தம் பல தீர்த்த வடிவேலும் திருவடிவும்
செருத்தந்த பூமியில் திசை மாறிச் செல்லவிட்டு
ஒருத்தனாய் நீ இருக்க உவந்தஇடம் இதுவாச்சோ.

14. பாட்டில் பணிந்தோர் பதி புராணம் சொல்லி
ஏட்டில் வரைந்தோர் எழுத்தில் புலமை பெற்றோர்
நாட்டில் எவரும் இல்லை, நகர்ந்து ஓடவைத்து விட்டு
காட்டில் மகிழ் கந்தா காரணத்தை கூறா யோ.

15. அன்புக்குரியவன் நீ என் ஆன்மா நீ ஐயனும் நீ
துன்பில் துயர் துடைத்த தூய துணைவனும் நீ
பண்பிற் பொலிந்த பாராண்ட தெய்வம் நீ
இன்புற்றிருக்க இடமிதுவாய் கொண்டனையே.

16. நற்கோயில் இல்லாத நாடும் இல்லை ஊரும் இல்லை
சிற்றூரும் இல்லாது சிறு கோயில் உட்புகுந்தாய்
எப்போது ஐயா இதற்கு விடை காணுவது
தப்பாமல் தந்துவிடு சரியான உன்பதிலை.

17. ஊரும் உறவும் உனைச் சுற்றம் என்றிருக்க
ஆரும் வியக்க அகற்றி, நீ ஆண்டு கொண்ட
பேரும் புலம்ப, பேசாது இருப்ப தென்னை
காரும் எமை என்ற கருணை ஒலி கேட்கலையோ.

18. வில்லேர் உழவர் விட்டகன்ற களனியுடன்
நல்லார்கள் வாழ்ந்த நல்வீடு நிலங்களெலாம்
வல்லோர்கள் கொண்டு வனமாக்க வைத்துவிட்டால்
எல்லோரும் வந்து இனி எங்கிருப்ப தெம் ஐயா.

19. கொட்டில் நற்கோயிலாய் கொண்ட அந்நாளதனில்
கிட்டத்தில் வந்து கேட்டதெல்லாம் தந்தவர் நீர்
முட்டப் பெருந்துயரும் மூடும் இடப் பெயர்வும்
நட்டத்தில் வைத்தால் நாடிவர நண்ணிடுமோ.

20. வினை தீர்த்த தெய்வம் நீ விளைந்த கல்வி செல்வம் நீ
தினைத்துணையும் உனைப்பிரியா தெய்வங்கள் வாழ்விடம் நீ
மனைப்பிரியா மாண்புடையர் மாண்டார், மனம் கலங்கி
முனைப்போரில் எமைஇழந்து முற்றும் இழந்தனையே.

21. அம்பன் அயல் இருக்க அயல் நாகர் வடக்கு இருக்க
துன்பு கொண்ட செம்பியனும் துளிர்த்து அமைந்திருக்க
நங்கள் நடு ஊரை நாதி அற்ற காடாக்கி
இன்பமே வா என்றால், எய்திடுமோ எம் இறையே.

**வேறு**

22. நல்ல குடாரப்பு நாடறிந்த பிரிவதுவாய்
சொல்லு புதுமையர் வாழ் சொந்தத்திரு ஊரை
வல்ல அரசும் வந்து கொண்ட யுத்தமுமாய்
செல்லாத காசாக்க சிறப்புண்டோ உமக்கையா.

23. ஊர் குடாரப்பில்லை, உயர்ந்தகுடி அமர்வில்லை
கார் என்று உனைப்பணிய காக்கைகளும் இங்கில்லை
தார் கடம்பு பூண்ட சண்முகனே தனித்திருந்து
சேர் என்று சொன்னாலும் சேர்வதற்கு எவருமில்லை.

24. சீர் புராண முறை வருமோ சிறப்புக்கள் இனிவருமோ
பேர் தங்க ஊர் வருமோ பிள்ளைகளும் வருவாரோ
வேர்தங்கு வித்தைகளும் விளங்கு குல முறை உறவும்
ஊர்தங்கு வேலவரே உலகறிய இருப்பீரோ.

25. முந்தைவினை முழுதும் முற்றாய் அகன்றோட
சிந்தைதனில் அன்புடன் நாம் சிறப்புற்று வாழ்வேனை
எந்தை முறை செய்ய எம்மனது ஏங்குறதே
கந்த முருகா, கருணைபுரி காலம் எதோ.

26. சூர்மார்பு கீண்ட சுந்தரத்து வடிவேலா
தார்மார் கடம்பா சண்முகனே சாவரைக்கும்
பார்தேவா என்று பணிந்து தினம் துதிக்க
வாராதோ அந்நாள் வள்ளி மகிழ் மன்னவனே.

27. கந்தா கடம்பா கதிர்வேலா கண்ணுதலின்
சிந்தா மணியே சீர் முருகா வடிவேலா
நந்தா விளக்கனைய நாயகமே முருகோனே
எந்தாய் உறவே எங்கள் குறை தீர்த்தருளே.

28. கண்கள் ஒளி மழுங்க காதும் செவிடாக
பண்கள் பணி பாடும் பல் வாயும் பேசாது
முன்னான மூக்கும் முகர்வை மறந்திட, (மெய்)
தன்னால் கிடக்குநிலை சண்முகமே பேசாயோ.

29. வள்ளி மணாளா வளர் யானை நாயகனே (நாம்)
துள்ளித் திரிந்த இடம் துகள் கொண்டு காடாகி
பள்ளியும் இன்றி பதி ஊரும் நாம் நீங்க
கள்ளப் புலக் குரம்பை கட்டளிக்கும் காலம் எதோ.

30. காலை விடாதுற்ற கனவான்கள் காடடைய
சாலைவர, ஊர்தான் சங்காரமாகி விட
பாலைவன மதுவாய் பரந்த மணல் விலையாக
வேலைவிடாது நிற்கும் வினைகடந்த தத்துவனே.

31. நாளும் பொழுதும் நண்ணியவர் சுற்றிவர
தோளும் கடம்பும் துணையாக நின்றிலங்கும்
மாளும் பொழுதுவரை மனுஜாதி எவருமின்றி
பாளும் குலவூரை பார்த்திருப்பாய் பண்ணவனே.

32. விளக்கு ஒளியாக்கி, விண்ணடைந்தார் எம் தந்தை
குலத்து விளக்காக்கி குன்றில் உனை வைத்த பிள்ளை
தலத்து சிறப்பு கண்ட தக்க முறை முன்னோர்க்கு
பலத்தில் பதில் உரைக்க பார் முருகா வா முருகா.

33. கற்றோர்கள் நிறை இடமாம் கவின் குடாரப் பென்று
மற்றோரும் சொல்ல மனம் மகிழ்ந்து இருந்த இடம்
உற்றாரும் இன்றி உறவு, மண் உயிர்கள் இன்றி
பற்றாக நீ இருந்து, பார்ப்பதென்ன பகர் முருகா.

34. முட்டு மட ஆலயமும் மூலவுறை வடிவேலும்
எட்ட இடிக்கும் இருபுறத்து தனிவளையும்
கட்டி முடித்த கவின் மணியும் மண்டபமும்
தட்டி மறைத்து, தனித்திருக்க நினைந்தனையே.

35. பூசை வயிரவரும், பொங்கும் அடுப்புகளும்
ஆசையுடன் நாம் புகுந்த அழகு மடப்பள்ளியும்
தேசக்கலையாக செய் சூரன் மயில் பிறவும்
நாசப்படவிட்டு நண்ணுவதேன் வடிவேலா.

36. காலம் பல கடந்தாலும் காண்போமோ பழமை முறை
சீலம் கொள் அன்பர் செயல் சேவை தெரிவோமோ
பாலம் இணைப்பு பழம் கனவாய் மறைந்தோட
கோலம் கொண்டாடு குமரா இங்குற்றனையே.

37. வேல் கொண்டு ஆடி விளைந்தாய் பெருவெற்றி
நூல் கொண்டு ஆடி நுகர்ந்தார் திருஊரை
பால் கொண்டு ஆடி பணிந்தார் பதியகல
மால் கொண்டு ஆடி மகிழ்ந்திருப்பது ஏனையா.

## வேறு

38. குடத்திடை விளக்காய் உற்ற குடாரப்பு சிற்றூர் தன்னை
படத்திறை தாங்கியுள்ள பாருள்ளார் தெரியும் வண்ணம்
இடத்திடை வைத்த மேன்மை எம் இறை உமக்கே உண்டு
தடத்திடை தனித்து வாழ்தல் தகுவதோ தனித்த வேலா.

39. நானறியாக் காலத்தில் நான் கண்ட முதல் பாடம்
வானவனாய் தெய்வமதாய் வணங்கும் ஒரு குருவாயும்
தேனதுவாய் தமிழ் சைவம் தெளிய வைத்த வடிவேலும்
கான் நிறை கரியாகி களமேடாய் காண்பதுவோ.

40. வந்தருள் செய், வானவனே வடிவேலின் திரு உருவே
கந்தனென முருகனெனக் கண்ட தெய்வம் நீயன்றோ
சிந்தனைக்கும் எட்டாத சிற்பரனே திருமகனே
தந்ததென்ன கொண்டதென்ன தர்ம வடிவேலவனே.

## அலங்காரம்

41. முந்தும் வினைபோக மூடும் பிணி அகல
நந்தம் குல விளக்கு நமது முருகையா மேல்
சந்தப் பா கொண்டு தமிழால் அலங்காரம்
வந்தித்து நான்பாட வருவாய் வடிவேலா.

42. ஒரு மாவின் கனி பெறவே உலகமெல்லாம் சுற்றியவா
தரு மாவின் அடி வளவில் தக்க காரை யதன்புலவில்
இரு மாதர் புடைசூழ ஏறுமயில் மீதமர்ந்து (எந்தன்)
குருவாகி நின்றவன் நீ குமர வடி வேலவனே.

43. சுந்தரத்து கவி பாடும் அருணகிரி நக்கீரன்
அந்த முனி அகத்தியனும் அடி பணிந்த திருமுருகா

வந்தணைந்து குடாரப்பில் வளர் கல்வி செல்வமுடன்
தந்தவனும் நீயன்றோ தனி வடிவேல் சண்முகனே.

44. உன்தன் புராணத்தை உலகெல்லாம் படித்தாலும்
இந்தன் இடத்தில் இனித்ததுபோல் எங்கும் இல்லை
அந்த நினைவும் அவனி எல்லாம் பாடவைத்து
கந்தன் அருளும் காட்டி நின்ற காரணனே.

45. பாட்டில் புலவன் நீ பாடல் வரி நாயகன் நீ
ஏட்டில் தெளிவும் நீ என் பாட்டு இறைவன் நீ
காட்டும் தொழிலும் நீ காணும் கனவும் நீ, வினை
ஓட்டும் சிறுவனுமாய் உளம் கண்ட முருகோனே.

46. தமிழுக்கு அதிபன் நீ தண்ணளி செய் தக்கோன் நீ
அமிழ்துக்கு இணையான அன்பன் நீ நண்பன் நீ
கமழ்கின்ற கடம்பணியும் கந்தன்நீ காரணன் நீ
உமிழ்கின்ற உன் அருளில் உளம் கனிந்த அன்பன் காண்.

47. எந்தை நாயகம் நீ ஏத்து குல தெய்வம் நீ
பந்தங்கள் நீக்கும் பராபரன் நீ பவம் போக்கி
கந்தன் நீ காவலன் நீ காண்பரிய கடவுளும் நீ
துன்பம் தீர்த்தாண்டு கொண்ட தூயதமிழ் முருகோனே.

48. வேடர் குடி விளையாடி வித்தகனாய் வினைதீர்க்க
காடர் குடி குடாரப்பில் கண்கண்ட தெய்வமதாய்
பாடு குடி பரம்பரையில் பத்திமை செய்தார் மனதில்
நாடு குடியாய் அமர்ந்த நாயகத்து வேல் முருகா.

49. ஊர் காக்கும் தெய்வமதாய் உயர்வுதந்து எமை ஆண்டு
பார் போற்றும் பெருமை தந்த பரமகுரு வானவனே
மார் பேற்று மருக்கொழுந்தே மாலவனின் மருகோனே
சீர் போற்று குடாரப்பு சிறப்பமைந்த சீர் முருகா.

50. தந்தைக்கு மந்திரத்தை தாள உரைத்து நின்ற
சிந்தைக்கும் எட்டாத சிற்பரனே தெய்வமகள்

வந்திக்கும் வானவனே வாக்கால் நினைவோர்கள்
சந்திக்கும் சண்முகனே தாங்கு வடி வேல்முருகா.

51. தந்தை தனிக் கூத்தும் தாயின் திருக்கூத்தும்
முந்து முறையான் முன் ஆடு பெரும் கூத்தும்
உன்தன் அருள் கூத்தை ஒத்திடுமோ முருகோனே
சொந்தந்தனி வேலா சுந்தரத்து நாயகமே.

52. சூரன் தனை வதைத்த சுந்தரத்து வேல் மகிமை
பாரில் அறிய வைத்த பைந்தமிழின் காப்பியனே
தீரம் நிறைந்த அருள் சிற்றூர் குடாரப்பின்
ஏரம்ப நாயகமாய் ஏத்த அருள் செய்வீரே.

53. கந்தன் முருகன் கடம்பன் வடிவேலன் என
சிந்திக்க செவ்வேள் சேயோன் சண்முகன் என்று
வந்திக்க ஆறுமுகன் மாயோன் மருகன் என
சந்திக்க பேர் கொண்ட தயாபரனே முருகோனே.

54. ஆற்றுப்படை பாட அருளினாய் கீரற்கு
போற்றி தமிழ் பாட புகழ் கச்சியப்பனுக்கு
ஏற்றி அருள் புரிந்த ஏறு மயில் வாகனனே
மாற்றமிலா நான்பாட மனமிரங்கி அருளாயோ.

**வேறு**

55. ஊர் என்ன சொல்லும் உறவென்ன செய்யும் உளம் கலக்கும்
சூர் என்ன செய்யும் துணை என்ன செய்யும் துன்பம் தரும்
பேர் என்ன செய்யும் பிறர் என்ன செய்யும் பெரும் தலைவா
கார் என்று உன்தன் கழல் பணிந்தேத்தி களிப்பவற்கே.

56. கானார் மயிலும் கவின் வடிவேலும் கண்டார் மகிழ
மானாய் உறையும் வள்ளியும் தெய்வத் திருமகளும்
தேனார் தமிழ் தந்த தெய்வமே, சேர்ந்த திருவடிவேல்
தானாக முன்வந்து ஆண்டருளாய் தமிழ் மாலையதே.

57. நந்தா விளக்கின் நவில் தீபமாக உனை நாடறியும்
சிந்தா மணியே தேவா திருமறை மூலவனே
அந்தோ முருகா, என அன்பர்கள் கூவ அபயமென
தந்தோம் அருள் என்று சார்பவனே தங்க வேலவனே.

58. வேட வடிவும் விருத்தாப்பியமும் விளங்க வைத்து
கூடி குறவள்ளி கொண்டவனே குல வேலவனே
நாட ஒரு தெய்வம் நான் கண்ட தட்டா குடியதனில்
தேடி இருந்திடு வேலவனே எந்தன் சீர் முருகே.

59. தீயோர் அறவும் சேர்ந்திடு நல்லவர் செய் பணியும்
நாயேன் உயர்வும் நாட்டிய நல் மணி நாயகமே
காயேர் கனியாய் கனிந்தவர் கற்றவர் காமுறவே
தாயேர் உணர்வாய் தமிழ் தருவாய் தங்க வேலவனே.

60. அன்னை சிலம்பும் ஆடிடும் பாம்பின் அமர் கதையும்
உன்னை பணியும் ஒரு அலங்காரமும் பாடவைத்து
என்னைப் பணி கொண்ட என்னவனே எங்கள் ஊரதுவாம்
மண்ணே அளந்தான் மருகோனே உன்தன் மாட்சியதே.

61. நாகம் புகழும் நற்தமிழ் சொன்ன நலம் அதனால்
பாகத்திருந்த பாவையை பாட்டில் பதித்ததனால்
சோகத் திருந்தோர் நினைவும் துயர் அற சொன்னதனால்
தேசக் கலைத்திரு பூஷணமாக்கி சிறந்தவனே.

62. ஏட்டில் எழுதும் எழுத்தனாய் என்னை எழுதவிட்டு
நாட்டில் சிறந்த நலம் உயர் அதிபனாய் நண்ணவைத்து
பாட்டில் எழுதி பரிசும் பதக்கமும் பார் புகழும்
கூட்டி எனக்கருள் செய்தவனே குல வேலவனே.

63. நல்லோர்கள் கூட்டும் நாமகள் நாவில் உறை அருளும்
பல்லோர் வியந்து பனிக்க புராண படி முறையும்
வல்லோன் என சொல வைத்தவனே வடி வேலவனே
கல்லாத என்னை கவியாளனாக்கிய கண்மணியே.

64. அருமறையாக அமைந்த புராண முறைகள் எல்லாம்
குருவடிவாய் என் சிந்தை புகுந்த குரு மணியே,
தரும் வடிவேல் என எந்தை சிறந்த பணியதனால்
வர முறையாக வந்துனைப் பாடி வணங்குவனே.

65. அப்பாவின் பிள்ளை அமை குருவாகி அமர்ந்துவிட
தப்பாது கேட்டு தனி முறை பயன்விரி தன்மை தந்தாய்
ஒப்பாது உயர்ந்த உயர் ராக பான்மையும் தந்துவைத்து
எப்போதும் உன்னை எண்ணவைத்தாய் எந்தை மாமணியே.

66. கண்ணில் ஒளியும் மழுங்கி உலவிடும் காலிரண்டும்
உள்னின்று உளைந்து உபாதையுமாகி உரு நிறைந்த
பொன்னின் அழகும் குறைந்தே, பொலியும் இளமை வற்ற,
உன்னை நினைப்பதலால் ஒன்றறியேன் என் ஊர் மணியே.

67. ஆரம்பமாக உன் கோயிலில் தந்தை அருகு இருந்தேன்
ஈரைந்து ஆறில் இறை புராணத்தை இயம்பி, பயன்
கூறிச் சிறந்து கொண்டான் இவனென கூறி நின்றும்
தேறித் தெளிந்து முடிக்கரிதே தேன் புராணமதை.

68. தந்தை உரையும் தள்ளாது பயன் தந்த அப்பிள்ளையும்
உந்தன் அருளும் உயர்வான சிவ அன்பன் தந்த அறிவும்
வந்த மணியன் இசையும் வளம் சேர்த்து மன்றதனில்
இந்த உயர்வினை தந்ததையா எங்கள் குல முருகா.

69. ஊரான பேர்கள் உவந்து படித்துரை சொன்னதனால்
பேரானதுண்டு பெயர் குடாரப்பில் பிறந்தவர்க்கு
வாராத செல்வமும் கல்வியும் ஞானம் வளங்களுடன்
ஆராத காதல் உளத்துடன் தந்தெனை ஆண்டனையே.

70. கந்தப் புராணம் கரைகண்டு கல் முறை கற்றவர்கள்
எந்தப் புராணமும் சொல்லுவர் என்ற உம் வாக்கமைய
சொந்தப் பதி குடாரப்பில் வாழ்ந்தவர் சொல்லிவைத்த
கந்தக் கலி முருகா உயர் காந்தத்தின் காவலனே.

71. மாடேறி வந்த சிவனும் மருங்கினில் உற்றவளும்
காடேறு யானை முகத்தனும் காக்கும் வைரவரும்
பாடேறி நிற்க, பதி குடாரப்பில் பரம்பொருளாய்
வீடேற வைக்கு முருகா வினை அறு வேலவனே.

72. குன்றாக் குடாவில் குளத்தினில் கோல நீராடி நின்ற
மன்றாடி மைந்த, மாயனின் சொந்த மருமகனே
நின்றாடி ஓய்ந்தோம் நிமலா, நின்பதம் கண்டவர்கள்
ஒன்றாலும் குறைவின்றி உயர்ந்து உவப்புறுவார்.

73. அன்னத்தில் கந்தன் சந்நிதி, தன் அலங்காரமதில்
வண்ணத்தில் நல்லூர், வடி வேலனாக வதிந்துறைந்து
எண்ணத்தில் உற்று, இருந்தமா விட்டபுரம் இருந்தும்,
சின்னத் தனிக் குடாரப்பதில் சேர்ந்து சிறந்தனையே.

74. முருகன்தான் வேல் என்ற முன்னோர்கள் கண்ட முறையதனால்
உருவதாய் கொண்டு ஒப்பற்ற வேலாய் உறைவதற்கு
தரும்மே தங்க தகு குடாரப்பினை தாங்கி நின்று
கருமமே கண்ணாய் காத்தருள் செய்திடும் காவலனே.

75. அன்பால் உருகி அடியாளாய் பணிந்து அகிலமதில்
உன்போல் ஒரு தெய்வம் கண்டேனும் இல்லை, உணர்ந்தவர்க்கு
கண்போல காத்து கவலைகள் போக்கி கடவுளுமாய்
மண்காத்து நிற்கும் முருகா மக்களைக் கூட்ட மறந்தனையே.

76. தனித்து இருந்தாய் அன்றொருநாள் அப்பழனியிலே
குனித்த புருவக் குவலயத்தாய் தந்தை கோபமதாய்
இனித்த தமிழால் எம் அவ்வை பாட இசைவு கொண்டு
புளித்த பழத்தால் அவளையும் சுட்ட புலமையனே.

77. விண்தோயும் கோபுரம் மண்டபம் கோலம் அதனைவிட்டு
மண்தோயு மாதிரம் கிழக்கதில் உள்ள மனை குடிகள்
கண்தோயு தூரம் காணாத ஊரில் கவலை விட்டு
புண் தோயு மாறுற்று இருப்ப தென்னை எங்கள் புண்ணியனே.

78. முற்பிறப்பாக முகுந்தன் மகளாய் முறை மறந்து
சொற்பிறப்பான சுந்தரி வள்ளி குறமகளை
கற்பியல் கொண்ட களவியல் காட்டி கலந்துநின்ற
விற்பயில் வேடன் விருத்தனுமாகிய வேலவனே.

79. ஏறும் மயிலும் இசை தேரில் நின்று அசை கொடியாய்
பாறும் அவுணர் பதுமனை சூரனை பண்ணிய போல்
நாறும் கடம்பணி நாயகமே உனை நற்தமிழால்
கூறும்படி பணி கொண்டனையே குல மாமணியே.

80. சூரன் இரிய துணையாக வந்தவர் தோற்று அழிய
தீரம் புரிந்த சிறப்புடை வேல் கொண்ட சீர் முருகா
பாரம் இறக்கி பணிந்தேனை பாடுவகை அறிந்து
காரும் கருணைக் கடலே கானகத்துற்ற கவிமணியே.

81. தெய்வத்து மாதும் சேர் குறவள்ளியும் சேர்ந்தணைய
கைவெற்றி வேலுடன் கானத்து மயிலின் மீதமர்ந்து
உய்ய தமியேன் உவந்துனைப் பாட என் உளம்புகுந்து
செய்ய, அருள் என்று செப்புவனே திருமால் மருகா.

82. கனிக்காய் கான மயில் மீது காடு நாடதெல்லாம்
முனைப்பாய் பறந்தாய், முது தமிழ் பாட்டி முத்தமிழால்
இனிப்பாய் கனியே இசையே நீ என இறைஞ்ச
தணிப்பாய் சினம் விட்ட சண்முகமான தனிமுதலே.

83. எட்டாப் பழம் தான் புளிக்கும் என்றோதிய எம் ஔவைக்கு
சுட்டாப் பழமும் சுடுகின்றதா, என்தன் பாட்டி என்று
மட்டாப் படுத்தி, மதி திறந்தாண்ட மயில் முருகா
கிட்டாப் பதியில் நாம் கிட்டிட புத்தி கிளத்திடுவாய்.

84. ஊர் எல்லை காத்து, உவந்தருள் செய்து உள்புகுந்தார்
பேர் எல்லை காத்து பெரும் செயல் செய்து பிணைந்தவரை
கார் என்று கண்டு காத்திடு, கந்தா கருணையினால்
பார் ஒன்று சொல்வன் பதி குடாரப்பினை பார்த்தருளே.

85. இப்பாச வாழ்வு இனிப்போதும் என்றுனை இங்குவிட்ட
அப்பாவும், பிள்ளை, சோமனும் உன்தன் அருகுவந்து
எப்பாலும் நீங்கா இறையே தனித்து இருப்பதென்னை
தப்பேது செய்தார், தனயரைக் காக்கும் தனிவடிவே.

**வேறு**

86. ஈராறு தோளும் இணையான கண்களுடன்
கூராறு முகமும் குளிர் ஞான திரு வேலும்
பேராறு இரண்டு பெரும் கரங்கள் கொண்டென்னை
காராறு தமிழ் பாட காத்து அருளுவையே.

87. அந்தம் ஒன்றில்லா அகல் ஞான திருவடியை
சந்தத் தமிழ் கொண்டு சாற்றினேன் அலங்காரம்
இந்தச் செயலும் ஈடில்லா (உன்)கருணை வழி
வந்தச் செயலென்ன வகுத்தேன் வடிவேலா.

88. கல்லாத நாயேனை கருத்துச் செறிவெதுவும்
இல்லாத பாட்டால் இயம்பவைத்து என் உளத்தில்
சொல்லாத இன்ப சுகம் தந்த தூயவனே
எல்லாரும் போற்ற இனி அருளும் தந்தருளே.

89. அந்த அருணகிரி அழைத்த திருப்புகழும்
சந்த நக்கீரன் சாற்றும் திரு முருகும்
பந்தப் பதியில் பணிந்தோனின் பாவடிவும்
எந்த முறைவருமோ யானறியேன் என் முருகா.

**வேறு**

90. அலங்காரம் சொல்லி அறிந்தோர்கள் இந்த அவனி எல்லாம்
துலங்கார் நரகக் குழி அணுகார் என சொன்னதனால்
கலங்காமல் இப்பா மாலையதாக்கி கந்தா என்தன்
குலங்காக்க என்று கும்பிட்டு உன்பதம் கோருவனே.

91. நான் என்ன செய்தேன் நமர் என்ன செய்வார் நானறியேன்
தேன் என்று கண்டு தெள்ளும் தமிழில் சில பொறுக்கி

கான் என்று கண்டும் அமர்கந்தா உன் கழலில் வைத்து
பான் நின்று வீழ்ந்து பணிந்தேன் எழுந்தேன் பதி இறையே.

92. உற்றாரும் இல்லை உறவாரும் இல்லை உனை அறியக்
கற்றாரும் இல்லை கவல்வாரும் இல்லை கண்டு மகிழ்
மற்றாரும் இல்லை மறை முதல் சொன்ன மதி அழகா
பற்றாய் அலங்காரம் பாடிப் புனைந்தேன் பார்த்தருளே.

93. எனக்குத் துணை இல்லை, ஏற்று அறிந்து சொல் யாருமில்லை
பிணக்கு பல தந்து பேயனும் பித்தனுமாகி வைத்து
மனத்தை புண்ணாக்கி மகிழ்ந்தனர், மானவடிவேலவனே
உனக்குத் தரும் அலங்காரம் இதனை உணர்த்திடுமோ.

**வேறு**

94. ஊரை அறிய வைத்தேன் உன்பாதம் சேவிக்கும்
பேரை தெளிய வைப்பாய் பேசேன் பெரும் பாவம்
காரைப் புலவு சேர் கந்தனே உன் கூத்து
யாரைத் தெளிய வைக்கும் யானறியேன் கூர்வேலா.

95. நாடறிய என்னை நலம் தந்து நயப்பாக்கி
பாடறிய வைத்து பல செல்வம் தந்தாக்கி
ஏடறிய வைத்து இணையான உன்பாதம்
ஓதரிய பாமாலை உள்ளம் குளிர்கிறதே.

96. கந்தன் திருக்கூத்து காந்த புராணமென
இந்தப் புவியோர் ஏத்தி மகிழ்வார்கள்
உந்தன் திருக்கூத்து உவந்து அடியேன் பாவாக்கி
எந்தத் திருவூரார் ஏத்துவரோ நானறியேன்.

**வேறு**

97. வற்றா அருள்சேர் வதியும் குடாரப் பதனில் வந்து
உற்றேன் குமரா உன் பாதம் பாடும் உவகையினால்
நற்றா மொழியில் நவின்ற இக் கூத்தலங்காரமதை
பற்றாய் பணிந்தேன் பாலா உன் பாத மலர்களுக்கே.

98. ஊரைப் புனைந்த பெயராகத் தந்தாய், உனது அருள்
சாரத் தெளிந்து தமிழ்தந்து தமியனை தாங்கியவா
காரைப் புலவின் கவின் முருகா கந்த வேலவரே
பேரையும் காத்து பிறப்பூரையும் காத்திடு பெருமையனே.

**வேறு**

99. கூரார் வடிவேல் குமரா குடா நீருறையும்
வீரா, தமிழ் தந்து எனை ஆண்ட வித்தகனே
பாராய் அடியேன் தமியேன் பாமாலையதை
காராய், களிகொண்டு கவி நலம் கண்டவற்கே.

**வேறு**

100. காலைப் பிடித்துனைக் கண்டு கொண்டார் எந்தை காலு ஒளி
வேலைப் பிடித்த விமலா வினையேன் பவங்களை நீ
மேலைப்படு கதிர் கண்ட பனிபோல் விலக்கிடவே என்
தாலைத் துணை கொண்டு தந்தேன் தமிழ்க்கவி மாலையதே.

101. சிறு குடாரப்பு சிறுவா, உன் கூத்து அலங்காரமதை
பெறுவார், படிப்பார் பேரிசை கேட்பார் பெருமையுடன்
நறவார் திருவடி நண்ணியே நாளும் நவில்பவர்க்கே
மறவாது அருளுதி, மனமகிழ் வாழ்வு மலர்ந்திடவே.

முற்றும்

வேலும் மயிலும் துணை





பாவலனே உன் பாடல்
பாடிப் பரவுவமே.

1. சீராரும் பழம் பதியாம் குடா நீரூரில்
சிறப்பாக கலை ஞானம் கற்றுத் தேர்ந்த
பாராரும் புகழ் சிதம்பரத்துப் பிள்ளை
பயந்த மகன் பசுபதியாம் பேராயுற்றோன்

2. ஏர் குலத்து குடாரப்பூர்க் குமரன் ஆடும்
ஏற்ற அவன் கூத்தை அலங்காரமாக்கி
பாகுடனே பால் தேனும் பரிவும் கூட்டி
படைத்திட்டான் பாடி நாம் பரவுவோமே.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.
14.09.2018

**பொன். ஸ்ரீராமச்சந்திரன்**
முருக பக்தர்
பௌராணிகர், பொது முகாமையாளர்

தமிழ்ப்பூங்கா - நெல்லியடி